# ஒரு புதிய Keller தொழில் நடத்தை நெறி

**நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பது உண்மையிலேயே மிக முக்கியமானது. நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்துதான் Kellerஇன் கலாச்சாரத்திற்குப் பங்களிக்கிறோம். நாம் என்ன செய்கிறோம், அல்லது என்ன செய்யத் தவறுகிறோம் என்பது நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு நேரடியான பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஒரே ஒரு செயல் அல்லது விடுபடல்கூட நமது நற்பெயரை, நம் பங்கு விலையை, நம் எதிர்காலத்தை அழித்துவிடக்கூடும்.**

**நாம் எங்கு இருந்தாலும், எந்த Keller நிறுவனத்தில் நாம் பணிபுரிந்தாலும், நம் தொழில் நடத்தை நெறி எல்லா சக ஊழியர்களுக்குமான நமது குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளையும் அமைக்கிறது. நம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்க நமது நெறியானது மூன்று விஷயங்களை ஒன்றுபடுத்துகிறது:**

1. ***சட்டம்*** - நாம் எப்போதுமே சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் – அதுதான் Kellerஇடம் வாடிக்கையாளர் கொண்டிருக்கும் நம்பிக்கையின் மையத்தில் இருக்கிறது.
2. ***நாம் பணிபுரியும் விதங்கள்*** - இவை தகவல், வழிகாட்டல், ஆதரவு ஆகியவற்றால் ஆன ஒரு பாதுகாப்பு அடுக்கை வழங்கி நாம் சட்டத்தை மீறாதிருப்பதை உறுதிப்படுத்துகின்றன:

- ***எல்லோரையும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருத்தல்***
  நாம் செய்யும் எந்தப் பணியின் விளைவாகவும் யாருக்கும் தீங்கு ஏற்படக்கூடாது என்று நாங்கள் நம்புகிறோம் – எனவே எல்லோரும் பாதுகாப்பாகவும் நலமாகவும் இருப்பார்கள்.

- ***ஊழியர்களின் உரிமைகளுக்கும் பன்முகத் தன்மைக்கும் ஆதரவளித்தல்***
  நாங்கள் தனிநபரின் உரிமைகளையும் கண்ணியத்தையும் நம் மக்களின் பன்முகத் தன்மையையும் மதிக்கிறோம், ஆதரிக்கிறோம், பாதுகாக்கிறோம் – எனவே நாம் எல்லோரும் மரியாதையுடன் நடத்தப்படுவோம்.

- ***அறவழி மற்றும் நேர்மையான நடத்தையைப் பேணுதல்***
  நாம் எப்போதும் நேர்மையாக இருக்கிறோம், நாணயத்துடன் செயல்படுகிறோம், சட்டத்தைப் பின்பற்றுகிறோம் – எனவே எல்லோரும் நம் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

- ***லஞ்சம், ஊழல் ஆகியவை இல்லாதிருத்தல்***
  நாம் லஞ்சமும் ஊழலும் இல்லாதிருந்து செயல்திட்டங்களை நியாயமாக வெல்வதை உறுதிப்படுத்துகிறோம் – எனவே நமது முடிவுகள் சரியான காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன என்று மக்கள் அறிவார்கள்.

- ***நம் தொடர்புறுத்தல்களை வெளிப்படையாகவும் பொறுப்போடும் வைத்திருத்தல்***
  நாம் வெளிப்படையாக, நேர்மையாக, தெளிவாக, பொறுப்போடு தொடர்புறுத்துகிறோம்.

- ***மேன்மையான வாடிக்கையாளர் சேவையை வழங்குதல், நம் தரநிலைகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்த நம்*** வாடிக்கையாளர்***களுடன் இணைந்து பணிபுரிதல்***
  நாம் நமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் அவர்களது எதிர்பார்ப்புகளை மிஞ்சவும் பணிபுரிகிறோம் – எனவே அவர்கள் மீண்டும் மீண்டும் நம்முடனே பணிபுரிவார்கள். நாம் நமது வாடிக்கையாளர்***களுடன்*** ஆக்கபூர்வமான உறவுகளை வளர்த்துக்கொள்வதையும் அவர்கள் நாம் எந்தக் கொள்கைகள் மற்றும் தரநிலைகளின்படி இயங்குகிறோமோ அவற்றைப் புரிந்துகொள்வதையும் உறுதிப்படுத்துகிறோம்.

- ***சமூகத்திற்கு உள்ளிருந்து பணிபுரிதல்***
  *நாம் எந்தச் சமூகங்களில் பணிபுரிகிறோமோ அவற்றிடம் பொறுப்போடும் மரியாதையோடும் செயல்படுகிறோம் – ஏனென்றால் நாமும் அவர்களில் ஓர் அங்கம்.*

- ***நம் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்***
  *நாம் சுற்றுச்சூழலை மதிக்கிறோம், அதைப் பாதுகாக்கிறோம், அதன் மீதான நமது தாக்கத்தைக் குறைவாக வைத்திருக்கிறோம் – எனவே நாம் எதிர்காலத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறோம்.*

- ***எது சரியோ அதற்குக் குரல் கொடுத்தல்***
  *நம் கொள்கைகள் கீழிறக்கப்படுவதாக நாம் நம்பும்போது நாம் எப்போதுமே அது பற்றி வெளிப்படையாகப் பேசுகிறோம் – எனவே நாம் ஒன்றாக நமது கொள்கைகளுக்குக் குரல் கொடுக்கிறோம்.*

3. ***நமது மதிப்பீடுகள் – நாணயம், கூட்டுழைப்பு, மேன்மை*** *ஆகிய நமது முதன்மை மதிப்பீடுகள், நாம் எப்போதுமே நம் சக ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள், சமூகங்கள் ஆகியோருக்குச் சரியானதையே செய்வதை உறுதிப்படுத்துகினறன – பல சமயங்களில் வெறும் சட்டத்தையும் நாம் பணிபுரியும் விதங்களையும் பின்பற்றுவதோடு நின்றுவிடாமல் அதையும் தாண்டிச் செல்கிறோம்.*